நான்காவது தேர்ச்சி : பல்வேறு பக்தி முயற்சிகளின் வழியாக செபவாழ்வை மென்மேலும் வளர்த்துக் கொள்வர்

21

## 4.4. திருயாத்திரைகள் விண்ணகப் பயணத்தின் முன்னடையாளம்

புதிய இடங்களைப் பார்க்கின்றோம். அங்குள்ள புதுமைகளை இரசிக்கின்றோம். அதன் முக்கியத்துவத்தை அறிகின்றோம். ஒன்றாகக் கூடிப் பகிர்ந்து உண்கின்றோம். ஆடிப் பாடி மகிழ்கின்றோம். இதனால் கல்விச் சுற்றுலாக்கள் எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும் புதிய அனுபவத்தையும் தருகின்றன. இதுபோன்ற பல்வேறு சுற்றுலாக்கள் பயணங்களை எமது வாழ்வில் மேற்கொள்கின்றோம்.

இத்தகைய சுற்றுலாக்களை மேற்கொள்ளுவதற்கு நாம் பல்வேறு ஆயத்தங்களைச் செய்கின்றோம்: சுற்றுலாவுக்குத் தேவையான உடைகளைத் தயார் செய்தல், உணவுப் பண்டங்களைத் தயாரித்தல், போக்குவரத்துக்களை ஏற்பாடு செய்தல்.

எமது குடும்பம், உறவினர், நண்பர்களுடன் சேர்ந்து சில திருயாத்திரைத் தலங்களுக்குப் பயணம் செய்கின்றோம். எமது முதாதையர் காலம் தொட்டு நாம் இதை மேற்கொள்கிறோம். இவை எமக்கு மகிழ்ச்சியையும், ஆறுதலையும், ஆன்மீகத் தேடலையும் ஏற்படுத்துகின்றன.

### சுற்றுலாக்களினதும் திருயாத்திரைகளினதும் நோக்கங்களை இனங்காணுங்கள்

| சுற்றுலாக்கள் | திருயாத்திரைகள் |
|---|---|
| ♦ பொழுதுபோக்கு | ♦ தபமுயற்சி |
| ♦ | ♦ |
| ♦ | ♦ |
| ♦ | ♦ |
| ♦ | ♦ |
| ♦ | ♦ |

திருயாத்திரைகள்
எமது விசுவாசத்தை வெளிப்படுத்தும்
செயல்களாகும்.

திருயாத்திரை வழியாக நாம் மனமாற்றம் பெற்று, இறையன்பிலும் பிறரன்பிலும் வளர்ந்து ஆன்மீக ஊட்டம் பெறுகின்றோம்.

மக்கள் தொன்று தொட்டுத் திருயாத்திரைகளில் ஈடுபட்டமையையும், அவை தொடர்பான பல்வேறு அனுபவங்களையும் திருவிவிலியத்தில் காண்கின்றோம். இஸ்ரயேல் மக்கள் வருடத்தில் இரு தடவை திருவிழாவைக் கொண்டாடுவதற்காக எருசலேம் சென்றார்கள். வசதிகள் எதுவுமற்ற நிலையில் கால் நடையாகவும் கழுதைகளிலும் தமது பயணத்தை மேற்கொள்வார்கள்.

- தேவாலயத்தில் இறைவனைப் புகழ்ந்தார்கள், நன்றி கூறினார்கள், தேவைகளுக்காக செபித்தார்கள். மனம்மாறினார்கள்.

இயேசுவும் சிறுபராயம் தொட்டு எருசலேம் தேவாலயத்திற்கு திருயாத்திரைகள் மேற்கொண்டதைக் காண்கின்றோம்.

**திருயாத்திரைகளின் நோக்கம்:**

திருமுழுக்கு எனும் அருளடையாளத்தின் வழியாக இறைபிள்ளையாகும் உரிமையைப் பெற்றுக் கொண்டோம். அன்று முதல் இறக்கும் வரை எமக்கு ஒரேயொரு குறிக்கோள் உள்ளது. இவ்வுலகில் இறைவனை நாடி வாழ்வதே அக்குறிக்கோளாகும். எனவே,

- இறைவனை அறியவும்
- இறை அறிவை வளர்க்கவும்
- இதனால் இறை அன்பை அனுபவிக்கவும்
- இறைத்தந்தையை அன்பு செய்யவும்
- அயலவரை அன்பு செய்யவும்

நாம் இவ்வுலகில் வாழ்கிறோம். எமது இவ்வுலக வாழ்வு ஒரு திருயாத்திரையாகும்.

திருத்தலங்களுக்குச் சென்று திருப்பலியில் பங்குபெறுவதும் செபிப்பதும் திருயாத்திரையாகும்.

விசேட விதமாக பாரம்பரியமாக அங்கீகரிக்கப்பட்ட திருத்தலங்களில் இறைமக்கள் ஒன்றாக இணைந்து பக்தி முயற்சிகளில் ஈடுபடுவதையும் இறைவனின் அருள்வரங்களுக்காக நன்றி கூறுவதையும் அவதானிக்கிறோம். இறைவனின் மகத்தான செயல்களுக்காக நன்றி கூறுகிறோம்.

## திருத்தலங்கள் :

மடு, தலவில, மாத்தறை, வகாகோட்டே, தேவத்தை ஆகிய முக்கிய திருத்தலங்கள் உட்பட ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் திருத்தலங்கள் உள்ளன.

| உமது மறைமாவட்டம்: | | |
|---|---|---|
| மறைமாவட்டத் திருத்தலம் | திருத்தலத்தின் பெயர் | அதன் வரலாறும் முக்கியத்துவமும் |
| | | |

## மடு திருச்செபமாலை அன்னை திருத்தலம்






1658ல் இலங்கைத் தீவில் காலடி வைத்த டச்சுக் கிழக்கிந்திய கொம்பனி போர்த்துக்கேயரின் ஆட்சியைக் கைப்பற்றி தனது ஆளுமையை இலங்கைத்தீவின் கரையோரப் பகுதிகளுக்குப் பரவலாக்கிப் பலப்படுத்திய போது கத்தோலிக்கர்கள் பலத்த எதிர்ப்புக்கு முகங்கொடுத்தனர். பல கத்தோலிக்க சமூகங்கள் அருகும் நிலையிலும், சில உறங்கு நிலை அன்பியங்களாகவும் வாழ முற்பட்டனர். மேலும் சில குழுமங்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சென்றனர். தங்களை வேத கலாபனையிலிருந்து காத்துக் கொள்ளவும், செபமாலை அன்னையின் திருச்சுருபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் 1670ம் ஆண்டளவில் மன்னார் பிரதேசத்தில் மாந்தை என்ற இடத்திலிருந்து வன்னிக் காட்டின் மருதமடுவுக்கு இடம் பெயர்ந்த இருபது குடும்பங்கள் சிறியதொரு ஆலயத்தைக்கட்டி தாம் எடுத்துவந்த செபமாலை அன்னையின் திருச்சுருபத்தை வைத்து வழிபாடு நடத்தினர். கண்டி இராச்சியப் பிரபுவை மணமுடித்த ஹெலேனா எனும் பெண் இங்கு ஆலயம் ஒன்றை நிர்மாணித்தார். ஏறக்குறைய 1686ம் ஆண்டின் பின் மறைப்பணியாற்ற இலங்கை வந்த யோசவ்வாஸ் அடிகள் மருதமடுவில் இடம்பெயர்ந்த கத்தோலிக்க சமூகத்தைக் கண்டார். ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தபின் இது திருப்பயணத் திருத்தலமாக மாறியது. இதுவே இலங்கையின் முதலாவது யாத்திரைத் திருத்தலமுமாகும். அமல மரித்தியாகிகள் தமது மறைதூதுப்பணியை ஆரம்பித்ததன் பின்னர் இத்திருத்தல ஆலயம் சிறிது சிறிதாக புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. தற்போதுள்ள ஆலயத்திற்கான அடிக்கல்லை வணக்கத்துக்குரிய ஆயர் பொஞ்ஜீன் ஆண்டகை 1872ம் ஆண்டு ஆவணித் திங்கள் 8ம் திகதி நாட்டினார். இவ்வாறு ஆரம்பித்த ஆலய நிர்மாணப்பணி தொடர்ந்து ஆற்றப்பட்டு ஆயர் யூலன் ஆண்டகையின் காலத்தில் நிறைவுபெற்றது. 1924ம் ஆண்டில் மடு அன்னைக்கு முடி சூடல் விழா கொண்டாடப்பட்டது. அதன் பின், 1944ம் ஆண்டில் இத்திருத்தலம் அபிஷேகம் செய்யப்பட்டது. திருத்தந்தை 13ஆம் சிங்கராயர் இவ்வாலயத்தை செபமாலை அன்னைக்கு அர்ப்பணித்தார். இப்பொழுது இலங்கையின் எல்லாப் பாகங்களிலிருந்தும் மக்கள் மருதமடுத திருப்பதிக்கு திருயாத்திரைசெய்து வழிபாடுகளில் பங்குபற்றுவதைக் காணமுடிகிறது.

ஒரு வருடத்தில் வருகின்ற மரியாவின் எல்லாத் தினங்களிலும் திருவிழாக் கொண்டாடப்படுகின்றது. சிறப்பாக ஐப்பசி மாதம் 7ம் திகதி செபமாலை மாதாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட தினமாக விழா கொண்டாடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தை | 1 | - | தூய மரியாள் இறைவனின் தாய் |
| மாசி | 2 | - | இயேசுவைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல் |
| பங்குனி | 25 | - | மங்கள வார்த்தை தினம் |
| வைகாசி | 31 | - | எலிசபெத்தைச் சந்தித்த தினம் |
| ஆவணி | 15 | - | பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தினம் |
| புரட்டாதி | 8 | - | மரியாவின் பிறப்பு |
| ஐப்பசி | 7 | - | செபமாலை மாதா |
| மார்கழி | 8 | - | மரியாவின் அமலோற்பவம் |

# தலவில தூய அன்னம்மாள் திருத்தலம்





18ம் நுற்றாண்டில் தூய அன்னம்மாளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கப்பலொன்று இத்தேவாலயம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அண்மையில் கடல் கொந்தளிப்புக்குள்ளாகியது. கப்பலில் இருந்த தூய அன்னம்மாள் திருச்சுரூபத்தை நோக்கிச் செபித்ததன் காரணமாக கப்பலிலுள்ள திருச்சுரூபத்தைக் கரைக்கு கொண்டுவர முடிந்தது. அக் கொந்தளிப்பின்போது இவ்வன்னைக்கு நேர்த்தி வைக்கப்பட்டது. அந்நேர்த்தியின்படியே இவ்விடத்தில் தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. இத்தேவாலயத்தின் வருடாந்த திருவிழா 157 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. இத்தேவாலயம் வெண் மணலையும், ஆலமரங்களையும் சூழவுள்ள அழகான பூமியாகும்.

இத்திருத்தலத்தில் வருடம் முழுவதும் நடைபெறும் பல்வேறு திருவிழாக்களில் பங்கு கொள்ளுவதன் மூலமும், தியானங்களில் பங்கு கொள்வதன் மூலமும், குடும்பங்களாக பல்வேறு பக்தி முயற்சிகளில் ஈடுபடும் பக்தர்கள் இறைவனின் புதுமைகளை அனுபவித்து வருகிறார்கள்.

# மாத்தறை அன்னையின் திருத்தலம்




மகதுரே அல்லது மாத்தறை என்ற நகரம் புதுமையான தேவ அன்னையின் சுரூபத்தினாலேயே மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது. யுகுளோசேட் என்ற யேசு சபையைச் சேர்ந்த குருவானவர் ஒருவரினால் 1907ல் ஆரம்பிக்கப்பட்ட இத்தேவாலயம் 17ம் நூற்றாண்டிலிருந்து வரலாற்றுக்கு சான்று பகர்கின்றது.

அன்னையின் திருச்சுரூபத்தை வீதியில் பவனியாக கொண்டு சென்றமையினாலேயே தென்பகுதியில் பரவியிருந்த கொள்ளை நோயான கொலரா அவர்களை விட்டு நீங்கியது.

மக்கள் தம் வாழ்வில் பல வரப்பிரசாதங்களைப் பெற்றனர்.

மூன்று முறை கடலில் அடித்துச் செல்லப்பட்ட இச்சுரூபமானது புதுமையான முறையில் மீண்டும் கிடைக்கப்பெற்றது. 2004-12-26 அன்று ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது மிகப் புதுமையான முறையில் இச்சுரூபமானது எவ்வித சேதமுமின்றிக் காப்பாற்றப்பட்டது.

# வஹக்கோட்டே தூய அந்தோனியார் திருத்தலம்





1687ல் இந்தியாவில் கோவாவிலிருந்து வருகைதந்த ஒரத்தோரியன் சபையைச் சேர்ந்த யோசேவாஸ் அடிகளாரும், 1705ல் அச்சபையைச் சேர்ந்த யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரும் இந்நாட்டிற்கு வருகை தந்தபோது இலங்கையில் முதல் தேவாலயமாக வஹக்கோட்டை அந்தோனியார் தேவாலயமே நிர்மாணிக்கப்பட்டது. இப்பெருமை முத்திப்பேறு பெற்ற யோசேவாஸ் அடிகளாரையே சாரும். அவ்வாலயம் ஓலையினாலேயே அமைக்கப்பட்டது. 1800ல் வஹக்கோட்டையில் இரண்டாம் தேவாலயம் அமைக்கப்பட்டபோது, தற்போது காணப்படும் தேவாலயம் அருட் திரு. லியோ ஹிலியம் அடிகளாரின் முயற்சியினால் கண்டியில் அக்காலத்தில் பணியாற்றிய மேதகு பேர்ணாட் ரெக்ஞோ ஆண்டகையினால் 1938ல் ஏற்படுத்தப்பட்டது.

இப்பிரதேச மக்கள் ஒல்லாந்தரின் கலாபனைக் காலத்தில் ஏறக்குறைய 100 ஆண்டுகளாக குருக்கள் பணியாற்ற முடியாத நிலையில் பொது நிலையினரின் தலைமைத்துவத்தில் கத்தோலிக்க வழிபாடுகளை மிக ஒழுங்கான முறையில் நடாத்தி விசுவாசத்தைப் பாதுகாத்தனர்.

அம்மக்களுக்கேயுரிய செபங்களும், கலாச்சாரமுமே இங்கு மிக விசேடமானதாகும்.

வஹக்கோட்டைத் திருவிழா வராலற்றில் பழமையானதாகும். ஏனைய சமயத்தவரின் ஒத்துழைப்புடன் திருவிழாத் திருப்பவனி நடைபெறும்.

திருவிழா நாட்கள்:

- ஆனி 13ந் திகதி ஊர்த்திருவிழா
- யாத்திரிகர்களுக்காக ஆனி 13ந் திகதிக்கு பின்வரும் ஞாயிறு தினத்தில் கொண்டாடப்படும் திருவிழா
- மடுத்தேவாலய யாத்திரிகர்களுக்காக ஆவணி 15ந் திகதிக்கு பின்வரும் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும் திருவிழா.

## தேவத்தை லங்கா மாதாவின் பசிலிக்கா திருத்தலம்





1911ல் லூர்து அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட இத்தேவாலயம் அருட்திரு. ஏ.கீகர் அ.ம.தி அடிகளாரினால் ஆரம்பிக்கப்பட்டது. 1917ல் லூர்து அன்னையின் கெபி நிர்மாணிக்கப்பட்டது.

1939ல் நடைபெற்ற இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது இலங்கையைப் பாதுகாக்குமாறு வேண்டி அன்னையிடம் நேர்த்தி வைக்கப்பட்டது. 1940.05.26ம் திகதி பேராலயம் ஜோன் மேரி மசோன் ஆண்டகையின் அந்த நேர்த்திக்கிணங்க பசிலிக்கா தேவாலயம் ஆரம்பிக்கப்பட்டு ''இலங்கை அன்னை'' என பெயரிடப்பட்டு அன்று முதல் இன்று வரை பல புதுமைகள் நடைறெுகிறது. இது ஏராளமான மக்கள் வரும் யாத்திரைத் தலமாகும்.

### செயற்பாடு

1. திருயாத்திரைப் பயணம் செல்லுமுன் நீர் உம்மை ஆன்மீக ரீதியில் ஆயத்தப்படுத்தும் முறையை எழுதுக?
2. திருயாத்திரை செல்லும் நீர் செபிக்கும் செபங்களையும், பாடல்களையும் உள்ளடக்கி சிறு நூலொன்றைத் தயாரிக்குக.

இத் திருத்தலங்களின் வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கின்ற போது, அவை

புனிதமான இடங்கள்
இறைமக்கள் ஒன்றாகக் கூடி
இறைமகிமையை எடுத்துரைக்கும்
புண்ணிய நிலங்களாகும்!

திருயாத்திரைத் தலங்களில் நாம் அனைவரும் ஒன்றாகக் கூடிச் செபிக்கின்றோம். எவ்வித இன, மொழி வேறுபாடுகளற்ற ஒரு வாழ்வை சமூகத்திற்கு எடுத்துக்காட்டும் ஓர் இடமாக திருயாத்திரைத்தலம் விளங்குகின்றது. செபதியானம் வழியாக இறைவனோடு ஒன்றித்திருப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும் இடமாகவும் அமைகின்றது.

## திருயாத்திரைத் தலங்கள் மட்டில் உமது பொறுப்புக்கள்!

- புனிதத்துவத்தைப் பேணல்.
- களியாட்டங்களைத் தவிர்த்தல்.
- விளையாட்டுகள் வீண்பொழுது போக்குகளைத் தவிர்த்தல்.
- குப்பை கூழங்களைக் கூட்டித் துப்பரவுசெய்தல்.
- வழிபாடுகளில் பக்தியோடு பங்குபற்றுதல்.
- பிறருக்கு இடையூறின்றி செபவழிபாடுகளை மேற்கொள்ளல்.

**திருயாத்திரைகள் விண்ணகப் பயணத்தின் முன்னடையாளம்!**

## திருயாத்திரைக்குத் தயாராவோம்!

- ஒறுத்தல் உபவாசம் மேற்கொள்வோம்!
- அயலவருடன் கோபதாபம் இருப்பின் ஒப்புரவாவோம்.
- எதிரிகளை மன்னிப்போம்!
- பகிர்ந்து வாழ்வோம்!
- ஆடம்பரங்களைத் தவிர்த்து எளிமையுடன் நடந்து கொள்வோம்!
- எவ்வித வேறுபாடுகளுமின்றிப் பக்திப் பற்றுதலோடு வழிபாடுகளில் பங்கேற்போம்!

## செயற்பாடு.

1. நாம் எதற்காகத் திருயாத்திரைகளை மேற்கொள்கின்றோம்?
2. திருயாத்திரைகள் மேற்கொண்டு திரும்பும் போது எம்மில் ஏற்பட வேண்டிய மாற்றங்கள் எவை?
3. திருயாத்திரைத் தலங்களின் சூழலைப் பாதுகாக்க நீர் செய்யக்கூடியவற்றை எழுதிக் காட்டவும்.
4. திருயாத்திரைத் தலங்களில் சமூக ஒருமைப்பாடு வெளிப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிட்டு உமது பங்களிப்பை விளக்குக.
5. நீர் மேற்கொண்ட யாத்திரைகள்

| திருயாத்திரைத் தலங்கள் | காலம் | வழிபாடுகள் | பெற்றுக்கொண்ட அனுபவங்கள் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |

**வாழ்க்கைக்கு**

திருயாத்திரைகளில் பக்தியுடனும்
ஆர்வத்துடனும் பங்குபெறுவோம்.
இறை அனுபவம் பெறுவோம்.
இறை புகழ் பாடுவோம்.
நாம் அமைதி, மகிழ்ச்சியை அனுபவிப்போம்.